අග්‍රාමාත්‍ය කාර්යාලය
பிரதம அமைச்சரின் அலுவலகம்
PRIME MINISTER'S OFFICE

58, ශ්‍රීමත් අර්නස්ට් ද සිල්වා මාවත, කොළඹ 07.
58, ஸ்ரீமத் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை, கொழும்பு 07.
58, Sir Ernest de Silva Mawatha, Colombo 07.


මගේ යොමුව / எனது குறியீடு / My Ref. — எனது குறியீடு PTF/01/Gen/01

ඔබේ යොමුව / உமது குறியீடு / Your Ref.

දිනය / திகதி / Date — 2020.05.20

அனைத்து மாவட்டச் செயலாளர்கள் மற்றும்
அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும்

**<u>சமூக நன்மைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.5000/- கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகளைக் கருத்திற்கொள்ளுதல்.</u>**

பொருளாதாப் புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர், கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் 2020.05.18 ஆந் திகதி அலரி மாளிகையில் இடம்பெற்ற மாவட்டச் செயலாளர்களின் கூட்டத்தின்போது, தற்போது ஏற்பட்டுள்ள பேரிடர் மிகுந்த நிலைமை காரணமாக மக்களுக்கு நிவாரணமளிப்பதற்கென செயற்படுத்தப்பட்ட சமூக நன்மைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ. 5000/- கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கு அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள குடும்ப அலகுகள் மற்றும் நபர்களுக்கு அந்தக் கொடுப்பனவுகளைச் செலுத்தும் பணிகள் சிறப்பாக இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

02. எனினும், மேற்குறிப்பிட்ட கூட்டத்தில், இது வரை கிடைத்துள்ள மேன்முறையீடுகளிலிருந்து ரூ. 5000/- கொடுப்பனவைப் பெறுவதற்குத் தகுதியான நபர்களைத் தெரிவுசெய்யும்போது, சில குடும்ப அலகுகளும் நபர்களும் முதலாவது சந்தர்ப்பத்தில் விடுபட்டுள்ளமையினால், அவ்வாறு விடுபட்ட குடும்ப அலகுகள் அல்லது நபர்களை இது வரை கிடைத்துள்ள மேன்முறையீடுகளின் அடிப்படையில் தெரிவுசெய்ய அவர்களுக்கு சந்தர்ப்பமொன்றை வழங்க வேண்டும் என மாவட்டச் செயலாளர்கள் சுட்டிக் காட்டினர்.

03. அதற்கேற்ப, ஜனாதிபதி செயலணிக்கு அல்லது மாவட்டச் செயலாளர்களுக்கு அல்லது பிரதேச செயலாளர்களுக்கு இது வரை சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகளில் அத்தியாவசியமாக அந்தக் கொடுப்பனவு கிடைக்க வேண்டிய ஏதாவது குடும்ப அலகொன்று அல்லது நபரொருவர் அவ்வாறு விடுபட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படின், ஏற்புடைய சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக ரூ. 5000/- கொடுப்பனவைச் செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.


කාර්යාලය / அலுவலகம் / Gen. Office: 2575317, 2575318
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 2574143, 2575454, 2575310
විද්‍යුත් තැපෑල / ஈ மெயில் / E-mail: secpm@pmoffice.gov.lk

04. இதன்போது மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்த நபர்களை அலுவலகங்களுக்கு அழைக்காமல், தெரிவுசெய்யப்படும் குடும்ப அலகுகளினதும் நபர்களினதும் அடையாளத்தை உறுதிப்படுத்திய பின்பு கொடுப்பனவைச் செலுத்துவதற்கு ஆவண செய்யுமாறு தயவுடன் அறியத் தருகிறேன். அந்தக் கொடுப்பனவைப் பெறுவதற்குத் தகுதியானவர்களாகத் தெரிவுசெய்யப்படும் குடும்ப அலகுகளுக்கு ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கான ஏற்புடைய கொடுப்பனவை மே மாதத்தில் ஒரே தடவையில் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

05. 2020.05.27 ஆந் திகதியில் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் அந்த மேன்முறையீடுகள் தொடர்பான இறுதித் தீர்மானத்தை வழங்கி கொடுப்பனவுப் பணிகளை நிறைவு செய்ய வேண்டும்.

இது தொடர்பாக நீங்கள் வழங்கும் ஒத்துழைப்பினை மிகவும் மதிக்கிறேன்.

**காமினீ எஸ். செனரத்**

பிரதம அமைச்சரின் செயலாளர்
பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும்
வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி

பிரதிகள்:

01. ஜனாதிபதியின் செயலாளர்
02. அமைச்சரவையின் செயலாளர்
03. கணக்காய்வாளர் நாயகம்

(01–03) தயவுடன் தகவலுக்காக

04. செயலாளர், நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
05. செயலாளர், அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்@ராட்சி அமைச்சு
06. செயலாளர், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சு

(04–06) தேவையான நடவடிக்கைகளுக்காக